சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 30.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 100/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | ஜான்சன் |
| தந்தை பெயர் | : | செல்வமணி |
| கிராமம் | : | அகர்திருநல்லூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | மெக்கானிக் |
| வயது | : | 30 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7 மற்றும் 10 ம் எதிரிகள் ஆஜர். 8 மற்றும் 9 ம் எதிரிகள் இருவரும் வேறு வேறு வழக்குகளில் முறையே 8 ம் எதிரி மதுரை மத்திய சிறையிலும், 9 எதிரி கோவை மத்திய சிறையில் உள்ள காரணத்தினால் அவர்களை ஆஜர் செய்ய P.T Warrant பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் போதிய காவலர்கள் இல்லாத காரணத்தினால் வீடியோ கான்பிரென்ஸ் மூலம் எதிரிகளை ஆஜர் படுத்துவதாக வேண்டுகோள் கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் இன்று

மேற்படி 8 மற்றும் 9 எதிரிகள் வீடியோ கான்பிரென்ஸ் மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவன் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வீடியோ கான்பிரென்சின் மூலம் ஆஜராகியுள்ள 8 மற்றும் 9ம் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பவத்தில் இறந்து போன குமரேசன் என்பவர் எனது அண்ணன் ஆவார். குமரேசன் எப்படி இறந்தார் என்றால் யாரோ வெட்டி கொலை செய்து விட்டனர். எப்போது எங்கு நடந்தது என்றால் 14.11.2021 ஆம் தேதி மாலை 5.20 மணியளவில் திருவாரூரில் இருந்து நாகப்பட்டினம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கிடாரம் கொண்டான் என்ற இடத்தில் எனது அண்ணன் குமரேசன் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது யாரோ வெட்டிவிட்டதாவும், சொன்னார்கள். நான் அப்போது அகரத்திருநல்லூரில் உள்ள எனது வீட்டில் இருந்தேன். தகவல் அறிந்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு யாரும் இல்லை. பின்னர் நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்தவமனைக்கு போய் பார்த்தேன். அங்கு எனது அண்ணன் பிரேதம் இருந்தது.அப்போது மணி 7.45 இருக்கும். போலீசார் என்னை காவல் நிலையம் வர சொன்னார்கள். நான் சென்றேன். போலீசார் என்னிடம் வழக்கு பதிவு செய்யவேண்டும் என்று இரண்டு பேப்பரில் கையொப்பம் கேட்டார்கள் நான் எழுதாத பேப்பரில் தான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது தான். இந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்பகிறது. போலீசார் என்னை எத்தனை முறை விசாரணை செய்தார்கள் என்றால் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 14.11.2021 ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் நானும், எனது தம்பி குபேஷ் என்பவரும் ஒரு இரு சக்கர வாகனத்திலும், எனது அண்ணன் குமரேசன் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்று கொண்டிருந்தோம் என்றும் எங்களது சின்னம்மா ஜமுனா என்பவரை பார்க்க சென்றோம் என்றும், அப்போது செல்லும் வழியில் திருவாரூர் வாளவாய்கால் என்ற இடத்தில் டீ குடித்தோம் என்றும், அப்போது அங்கு எங்களுக்கு தெரிந்த சுசிலா என்பவர் அங்கு இருந்தார் என்றும், அவர் எனது அண்ணனின் இரு சக்கர வாகனத்தில் இங்கு இருந்து பின்னார் அமர்ந்து சென்றார் என்றும், சில நிமிடங்கள் கழித்து நானும், எனது தம்பி குபேஷ் இரு சக்கர வாகனத்தில் கிளம்பி சென்றோம் என்றும், அப்போது நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் TN50X 8499 என்ற ஒரு இரு சக்கர வாகனத்தில் 20 முதல் 25 வயது மதிக்க தக்க ஜீன்ஸ் பேன்ட் அணிந்திருந்த 3 நபர்கள் சென்றதாகவும், அவர்கள் என்னை முந்தி சென்று எனக்கு முன்னால் 100 அடி தள்ளி சென்று கொண்டிருந்ததாகவும், எனது அண்ணன் சென்ற இரு சக்கர வாகனத்தை மறித்தனர் என்றும், அப்போது மேலும் இரு சக்கர வாகனத்தில் இருந்த இரு நபர்கள் இறங்கி அவர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களால் எனது அண்ணனின் தலையில் தாக்கினார்கள் என்றும், இதில் இரு சக்கர வாகனத்தில் வந்த எனது அண்ணனும், சுசிலா என்பவரும் கீழே விழுந்துவிட்டனர் என்றும் சொன்னால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்த சுசிலாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டு மயங்கிவிட்டார் என்றும், இந்நிலையில் கீழே விழுந்து தடுமாறி எழுந்த எனது அண்ணனை இரு சக்கர வாகனத்தில் வந்திருந்த நபர்கள் இருவர் மாறி மாறி ஆயுதங்களால் வெட்டியதாகவும், இதில் படுகாயம் அடைந்த எனது அண்ணனனுக்கு பலத்த இரத்த காயம் ஏற்பட்டு இறந்து விட்டார் என்றும். சொன்னால் சரியல்ல. நான் தான் காவல் நிலையம் சென்று எழுத்துப்பூர்வமாக புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் எங்கள் ஊரை சேர்ந்த கருப்பு என்பவர் கொலை செய்யப்பட்டார் என்றும், அதில் எனது அண்ணனுக்கு தொடர்பு உள்ளதாக கருதி இதன் காரணமாகத்தான் இந்த கொலை செய்யப்பட்டுள்ளதாக தான் கருதுவதாக போலீசாரிடம் சொன்னேன்

என்றும் சொன்னால் சரியல்ல. பின்னர் 1ம் எதிரியை 17.11.2021 ஆம் தேதி கைது செய்ததாகவும் போது என்னை போலீசார் இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் என அழைத்தார்கள் என்றும், அப்போது கருப்பு என்பவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக உள்ள முன்விரோதத்தில் காரணமாகதான் என் அண்ணனை எதிரிகள் கொலை செய்திருப்பார்கள் என வாக்குமூலம் அளித்தேன் என்றும், சொன்னால் சரியல்ல. எங்களது ஊர் காரர்கள் மற்றும் எனக்கு தெரிந்தவர்கள் மற்றும் எதிரிகளுக்கு வேண்டியவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் சம்பவத்தை பார்த்ததையும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததையும் மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.30 17:02:43 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.